தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 18, திருவள்ளுவர் ஆண்டு–2050

2019 ஜூலை 3, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.”

உணவுப் பொருள்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல் உறுதுணையாக உள்ளனர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

மருத்துவத் தாவரங்கள் ஆராய்ச்சி மையம்

***32452—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தமிழ் பல்கலைக்கழகம் சார்பில் செயல்படும் தஞ்சாவூர் மூலிகைப் பண்ணையில் மருத்துவத் தாவரங்கள் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தமிழ் பல்கலைக்கழகம் சார்பில் செயல்படும் தஞ்சாவூர் மூலிகைப் பண்ணையில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாக 5½ ஏக்கர் பரப்பளவில் 300–க்கும் மேற்பட்ட பல்வேறு வகையான மூலிகைகள் பயிரிடப்பட்டு, வளர்க்கப்பட்டு வருகின்றன. மூலிகைகள் எனப்படும் இத்தகைய மருத்துவத் தாவரங்களை உபயோகப்படுத்தி, உடல் சார்ந்த இன்னல்களுக்கு சிகிச்சை செய்வதற்கு சித்த மருத்துவ மாணவர்கள் ஆராய்ச்சி செய்து பயின்றுவரும் துறை மூலிகை அறிவியல் எனப்படும்* Herbal Science *துறையாகும். உதாரணத்திற்கு, வயிற்றுப் புண்ணை ஆற்றச் செய்யும் தோசைக்கத்தி, தலைவலியைப் போக்கும் சீனி மரம், குளிர்ச்சியைத் தரும் ஓரிதழ் தாமரை போன்ற மருத்துவத் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. மருத்துவத் தாவரங்களின் எண்ணிக்கை குறைந்துவரும் இன்றைய நாட்களில், அத்தாவரங்களின் பாதுகாப்பையும், தேவையையும் கருத்தில்கொண்டு, பொது மருத்துவத்திற்கு இணையாக சித்த மருத்துவத்தையும் ஊக்கப்படுத்துகின்ற வகையில், கூடுதலாக நிதியை வழங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் உள்ள* Herbal Science *எனப்படும் மூலிகை அறிவியல் துறையை மேலும் ஊக்கப்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

2019 ஜூலை 3]

அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் இயங்கிவரும் தமிழ் பல்கலைக்கழகத்தில் செயல்படும் மூலிகைப் பண்ணையானது அந்தப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்தாலும், அதற்கு அரசின் நிதி உதவி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மூலிகைப் பண்ணைக்கு மட்டுமல்ல; எந்தவிதமான ஆராய்ச்சியாயினும், ஆராய்ச்சிக்கான நிதியினை பல்கலைக்கழக மானியக் குழுவே (UGC) அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கி வருகிறது. எனவே, வனத் துறைமூலம் தமிழ் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மூலிகைப் பண்ணையை ஆராய்ச்சி மையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் மூல வினாவிற்குத் தொடர்பில்லாதது என்று கூறக் கூடாது. இதனை முக்கியப் பிரச்சினையாகக் கருதி, அவருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகப் பதிவு செய்கிறேன். சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் கஜா புயல் கோரத் தாண்டவத்தால், டெல்டா மாவட்டங்களை பாலைவனமாகச் சீரழித்ததோடு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.*

முற்பகல் 10–05

குறிப்பாக, வனத் துறைக்குச் சொந்தமான, 30 ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்து முதிர்ந்த, சுமார் இரண்டு இலட்சம் தேக்கு மரங்கள், ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள், கிராம சாலைகள், பாதைகள் மற்றும் விவசாய நிலங்களில் விழுந்து கிடக்கின்றன. அவற்றில், அப்புறப்படுத்தியது போக, இன்னும் 90 சதவீத மரங்கள் விழுந்த இடத்திலேயே கிடக்கின்றன. இதனால், அவை விவசாயிகளுடைய விளை நிலங்களில் விவசாயம் செய்வதற்கு இடையூறாகவும், நீர்வழித்தடங்களுக்கு தடையாகவும் இருக்கின்றன.

மேலும், தேக்கு மரங்கள் மண்ணில் புதையுண்டு, வெயிலினால் வெடிப்புகள் உருவாகி, மக்கிய நிலையில் இருப்பதால், அவை எதற்கும் பயன்படாமல் இருக்கின்றன. அதனால், அரசுக்கு கூடுதலாக வரக்கூடிய சுமார் ரூ.100 கோடி மதிப்புடைய தொகை வருவதற்கான வாய்ப்பு இல்லாத நிலை இன்றைக்கு உள்ளது. அவற்றை ஏலம் விட்டு, அந்தப் பகுதியில் உள்ள மரங்களை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் புதிய மரக் கன்றுகளை நட்டு வைத்தால், ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். அதோடு பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஆற்றின் இருகரைகளிலும் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுத்திடவும், கரைகளை பலப்படுத்திடவும் இயலும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். கஜா புயலின்போது நிவாரணப் பணிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மின் துறை ஊழியர்கள் பெரும் அளவுக்குச் செய்தனர். அந்தப் பணிகளை பொது மக்கள் இன்னும் நினைவுகூர்கிற வகையில், அந்த நிகழ்வுகள் கண்ணை விட்டு அகலாமல் இருக்கின்றன. எனவே, மண்ணில் புதையுண்டு கிடக்கும் தேக்கு மரங்களை அகற்றிடவும், புதிய மரக் கன்றுகளை நடவும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில், அத்தியூர் ஊராட்சியில், குருவூர் கிராமத்தில் பல ஆண்டுகளாக சுடுகாடாகப் பயன்படுத்திவரும் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக இருந்தாலும் சரி, 'தாய்' திட்டமாக இருந்தாலும் சரி, அண்ணா மறுமலர்ச்சி திட்டமாக இருந்தாலும் சரி, அதன்மூலமாக அங்குள்ள சுடுகாட்டிற்கு கொட்டகை கட்டுவதற்கான அனுமதி இல்லாததனால், கட்டமுடியவில்லை. அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக அது இருக்கிற காரணத்தால், அந்தச் சுடுகாட்டிற்கு கொட்டகை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பேசுவதுபோல விரிவாகப் பேசி கேள்வியைக் கேட்டிருக்கிறார். கிட்டத்தட்ட 15

2019 ஜுலை 3]

சப்ஜெக்ட்டில் பேசியிருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள். நீங்களும் தாராள மனதுடன் அனுமதித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்வியாக இருப்பதால்தான் அனுமதித்தேன்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: அவர் கேட்ட கேள்விகளுக்கும் எனது துறைக்கும் சம்பந்தமே கிடையாது. இருந்தாலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில் மீண்டும் மரக் கன்றுகளை நடுவதற்கும், விதைகளைப் போடுவதற்கும் உரிய வேலைகளை வனத் துறை முறையாகச் செய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம், தமிழ் பல்கலைக்கழகம் சார்பில் செயல்படும் தஞ்சாவூர் மூலிகைப் பண்ணையில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வி. அதற்கு எங்கெங்கோ சுற்றி வருகிறார்கள். நிச்சயமாக மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனினும், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு நிதி வேண்டுமானால், இந்த மூலிகைப் பண்ணையை ஆராய்ச்சி மையமாக மாற்ற வேண்டுமானால், மத்திய மூலிகைத் தாவரக் கழகத்தையோ (National Medicinal Plants Board), அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையையோ (Department of Science and Technology) அல்லது உயிரியல் தொழில்நுட்பத் துறையையோ (Department of Biotechnology) அணுகி முன்மொழிவு பிரேரணை (proposal) அனுப்பினால், நிச்சயமாக நிதியினைப் பெற்று, ஆராய்ச்சியினை மேற்கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் தொகுதியில், வேலூர், மாநகராட்சி அந்தஸ்தில் இருக்கிறது. அங்கு தொரப்பாடி மகளிர் ஜெயில் இருக்கிறது. அதற்குப் பின்னால் Forest

Department–க்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அங்கே உயிரியல் பூங்கா ஒன்றை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அங்கே தங்கக் கோயில் இருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அங்கு ஓர் உயிரியல் பூங்காவை அமைத்துக்கொடுத்தால் சிறப்பாக இருக்கும். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், அண்ணா அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சராகி, அங்குள்ள கோட்டையைச் சுற்றி வருவதற்கு இரயில் பாதை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்; பூங்கா எல்லாம் உருவாக்கிக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பார்த்தீர்களென்று சொன்னால், 2006–ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, சுற்றுலாத் துறையின் சார்பில் கோட்டைக்குப் பக்கத்தில் பெரியார் பூங்காவை உருவாக்கித் தந்து, அந்தப் பூங்காவை அன்றைய தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தனது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். இந்த நிலையில், நம்முடைய சுற்றுலாத் துறை சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே உயிரியல் பூங்கா ஒன்றை அமைத்து, திறந்து வைத்தால் சிறப்பாக இருக்கும். போதுமான இடம் இருக்கிறது. எனவே, அதைச் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூரில் மூலிகைத் தோட்டம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 2016–2017 ஆம் ஆண்டு முதல், 2018–2019 ஆம் ஆண்டு வரை சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில் 20,525 சுய உதவிக் குழுக்கள் மூலமாக 63.28 இலட்சம் ரூபாய் செலவில் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின்மூலம் அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்கான மனுக்களை முறையாக வனத் துறைக்கு அனுப்பி வைத்தால், அதற்குரிய பரிசீலனையை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.